# 3 பாடம்

# அன்பற்றவரிடம் அன்புகாட்டுதல்

***புதியபள்ளியில் மாணவனாகச் சேர்ந்திருந்த ஸ்பர்ஜனுக்கு மிகவும் கவலையாக இருந்தது. தனது பழைய பள்ளி நண்பர்களை நினைத்து ஏங்கினான். யாருமே இல்லாமல் காட்டில் தனித்து நிற்பதுபோல இருந்தது. அப்போது அங்கு வந்த சில்வெஸ்டர் என்ற ஒரு மாணவன் அவனிடம் அன்பாகப் பேசினான். தன்னுடைய நண்பர்களோடு அவனையும் சேர்த்துக்கொண்டான். பலராலும் ஒதுக்கப்பட்டிருந்தவர்களை இயேசு தமது நண்பர்களாகக் கொண்டிருந்தார்.***

யூத அதிகாரிகளில் சீமோன் என்பவன் முக்கியமான ஓர் அதிகாரி. தொழுநோயாளியாக (குஷ்டரோகியாக) இருந்த அவனை இயேசு சுகமாக்கியிருந்தார். பணக்காரனான சீமோன் தனது தொழுநோயை இயேசு சுகமாக்கியிருந்ததால், இயேசுவுக்குத் நன்றியைக் காட்ட விரும்பி, ஒரு பெரிய விருந்து செய்தான். இயேசுவை முக்கியப்படுத்தி அவ்விருந்திற்கு அழைத்தான்.

பெத்தானியா ஊரைச் சேர்ந்த மரியாளும் அங்கே வந்திருந்தாள். அவள் ஒரு பாவி என்பது எவருக்கும் தெரியாது. ஏழு அசுத்த ஆவிகளைத் தேவன் மரியாளிட மிருந்து விரட்டியுள்ளார் என்பது மட்டுமே மற்றவருக்குத் தெரியும். ஆனாலும், மரியாள் ஒரு பாவி என்பது சீமோனுக்கு மட்டுமே தெரியும். ஏனெனில் அவளை அப்படியொரு பாவத்திற்குள் வழிநடத்தினவன் அந்தச் சீமோன்தான். எனவே, மரியாளை அவன் விருந்திற்கு அழைக்கவில்லை.

ஆனால், தன் பாவங்களிலிருந்து மரியாள் இப்போது விடுதலை பெற்றிருந்தாள். இயேசுவுடன் இருக்கும் எல்லாச் சமயங்களிலும் ‘தேவனுக்குப் பிரியமாக வாழமுடிகிறது’ என்பதையும்,



## மனன வசனம்

**எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்.**
**1பேதுரு 2:17.**

'பாவத்தை எளிதாக வெல்ல முடிகிறது' என்பதையும் நன்கு அறிந்திருந்தாள். எனவே, இயேசு எங் கெல்லாம் செல் கிறாரோ அங்கெல்லாம் மரியா ளும் சென்றுவிடுவாள். மரியாள் அமைதியாக இயேசு வின் பின்னாலேயே வந்து அவரது பாதத்தின் அருகே அமர்ந்தாள்.

மரியாள் தனது நன்றியை இயேசுவிற்குக் காட்ட விரும்பி னாள்.

திருமணத்திற்கென்று ஒவ் வொரு பெண்ணும் பத்திரமா கச் சேர்த்து வைத்திருக்கும் விலையுயர்ந்த வாசனைத் தைலக்குவளையை மரியாள் அங்கே கொண்டு வந்திருந் தாள். ஒருவரும் தன்னைப் பார்க்காதபோது இயேசுவின் தலையில் தைலத்தை ஊற்றினாள். இயேசு வினால் தன் பாவவாழ்வு மாறிய மகிழ்ச்சியால் உள்ளம்பொங்கியது. இயேசுவின் பாதங்களைத் தன் கண்ணீரால் கழுவினாள். பின் தனது நீண்ட தலைமுடியால் துடைத்தாள். யாருக்கும் தெரியாமல் மரியாள் இதைச் செய்தாலும் நறுமணம் அறை யில் வெகுவேகமாகப் பரவிற்று. "சே! இவ்வளவு விலையுள்ள தைலத்தை இப் பெண் வீணாக்கிவிட்டாளே! இந்தப் பணத்தை ஏழைகளுக் காவது கொடுத்திருக்கலாமே. இவ்வாறு சிலர் மரியாளைக் குற்றமாகப் பேசினர்.

'இவள் பாவியல்லவா? இயேசு உண்மையாகவே ஒரு தீர்க்கதரிசியென்றால் மரியாள் தம்மைத் தொட அனுமதிக்க மாட்டாரே!' எனச் சீமோன் சிந்தித்தான்.

"ஏழைகள் எப்போதும் உங்களிடம் உண்டு; நானோ எப்போதும்உங்களோடிரேன்.



## செய்தி

**ஒதுக்கப்பட்டவர்களையும் நான் நேசிக்கவேண்டுமென தேவன் விரும்புகிறார்.**

எனவே, மரியாள் செய்தது சரியே'' என்றார் இயேசு.

பின்னர் சீமோனிடம், ''சீமோனே, ஒருவனிடத்தில் ஐந்நூறு வெள்ளிக் காசும், ஐம்பது வெள்ளிக்காசும் இருவர் கடன்வாங்கியிருந்தனர். இருவராலும் கடனைக் கொடுக்க வழியில்லாததால், அந்தக் கடனை அவன் மன்னித்து விட்டான். இப்படியிருக்க இவர்களில் எவன் அந்த எஜமானிடத்தில் அதிக அன்பாயிருப்பான்?'' என்று கேட்டார்.

''அதிக கடன் மன்னிக்கப்பட்டவன்'' என்றான் சீமோன்.

இயேசு சீமோனிடம் நீ என் கால்களைக் கழுவ தண்ணீர் தரவில்லை. ஆனால், மரியாளோ தன் கண்ணீரினால் என் கால்களைக் கழுவி என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்; பரிமளதைலம் பூசினாள். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது'' என்றார்.

***செய்முறை:*** *இந்தக் குவளையினுள் மறைந்து கிடக்கும் நல்ல பண்புள்ள வார்த்தைகளைக் கண்டெடுத்துக் கோடுகளில் எழுதுக.*




1. ______________

2. ______________

3. ______________

4. ______________

**புதிர் 3**